வருகிறவர்களுக்கும் தெரிவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுபோன்று செய்ய வேண்டுமென்று நாங்கள் ஏற்கெனவே சொல்லி இருக்கிறோம். அதை இனிமேல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல எல்லா இடங்களில் வேகத்தடை இருக்கிற இடங்களில் மிகக் கடுமையாக நம்முடைய அதிகாரிகளுக்குச் சொல்லி ஒரு மாதத்திற்கு ஒரு தடவை அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை அந்தப் பகுதிகளில் இருக்கிற உதவிப் பொறியாளர்கள் கண்காணித்து அந்த வெள்ளை பெயிண்ட் அழிந்து விடுகிறபோது உடனடியாக மறுபடியும் பூச வேண்டுமென்று நான் அதிகாரிகள் மட்டத்தில் நடந்த கூட்டத்தில்கூட பேசி இருக்கிறேன். நம்முடைய குமுளி நெடுஞ்சாலையில் தேனி பகுதியில் நாங்கள் போகிறபோது இதுபோன்று பிரச்சினை வந்தது. ஆகவே அதற்கு பின்னாலேதான் இந்தப் பிரச்சினையை அதிகாரிகளை எல்லாம் கூப்பிட்டு வைத்துச் சொல்லி இருக்கிறோம். ஆகவே தொடர்ந்து அது பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக வேகத்தடைகள் சில இடங்களில் உயரமாக இருக்கின்றன என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். ஏனென்றால் நாமே போகிறபோது சில இடங்களில் நிதானமான உயரத்தில் நெடுஞ்சாலைகளில் போட்டிருப்பதைப் பார்க்கிறோம். அம்பாசிடர், ஜீப்புகள் போகிறபோது பாதிப்பு இருக்காது. கன்டசா, மாருதி 1000 போன்ற கார்கள் எல்லாம் போகிறபோது அவைகளின் அடித்தளம் தாழ்ந்து இருக்கிற காரணத்தால் சில இடங்களில் இதுபோன்ற வாகனங்கள் செல்கிறபோது பிரச்சினை ஏற்படுகிறது என்று எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது அதை மனதில் வைத்து வேகத்தடைகளை அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே தலைமைப் பொறியாளர் நெடுஞ்சாலைக்கும், தேசிய நெடுஞ்சாலைக்கும் அரசின் சார்பில் ஆலோசனை சொல்லி இருக்கிறோம். ஆகவே, அதுபோன்று உயரமாக இருக்கிற பல இடங்களில் மாற்றி இருக்கிறார்கள். சில இடங்களில் ரோடு போடுகிறபோது வேகத்தடைகளை போடாமல் விட்டு விடுகிறார்கள் என்ற புகாரும் வந்திருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம், எந்தெந்த இடங்களில் ஏற்கெனவே போடப்பட்டிருந்ததோ அவைகளை எல்லாம் ரோடு போட்டு முடிந்தவுடனேயே ஒரு வார காலத்திற்குள்ளே போட வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ஆகவே இதுபோன்று விதிமுறைகள் எங்காவது மீறப்படுமேயானால் அரசினுடைய உத்தரவுகளை அரசினுடைய இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்று சொல்லப்படுகிற அறிவுரைகளை வேறு எந்தப் பகுதியிலாவது யாராவது

1995 நவம்பர் 10]

மீறி இருப்பார்களேயானால் அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வர வேண்டும். உடனடியாக அந்தக் குறைகள் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

86—

போளூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள் கட்டுதல்

23950—திரு. தா. வேடியப்பன்:***

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) போளூரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) அதற்காக புதிய மனுக்கள் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) போளூரில் 1990 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட வீட்டுவசதித் தேவை கணிப்பின்படி 84 வீடுகள் அதாவது குறைந்த வருவாய் பிரிவினருக்காக 26 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காக 39 வீடுகளும், உயர் வருவாய்ப் பிரிவினருக்காக 19 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டன. இவ்வீடுகளை ஒதுக்கீடு செய்ய நடைபெற்ற குலுக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 43 பேரில் 2 நபர்கள் மட்டுமே ஒதுக்கீட்டை பெற்றுக் கொண்டார்கள். எனவே மீண்டும் விளம்பரம் செய்யப்பட்டு குலுக்கல் நடைபெற உள்ளது.

(ஆ) எனவே புதிய மனுக்கள் அனுமதிக்கப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது போளூரில் கட்டப்பட்டுள்ள ஹவுசிங் போர்டு வீடுகளைத்